**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.101/2018**

**Prosecution Witnesses : 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : பஞ்சவர்ணம் | Caste | : |
| Husband Name | : முத்துராமன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(27.06.2025)**

**முதல் விசாரணை**

நான் வில்லூாரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சங்கரேஷ்வரி எனது நாத்துனார் மகள் ஆவர். சுரேஷ்குமார் சங்கரேஷ்வரின் கணவர் ஆவர். பழனிவேல் அ.சா.1 ன் மாமனார், பரமேஷ்வரி அ.சா.1ன் மாமியார் ஆவர். நித்தியகல்யாணி அ.சா.1ன் நாத்துனார் ஆவார். லதா என்பவரை எனக்கு தெரியவில்லை. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு சங்கரேஷ்வரிக்கும், சுரேஷ்குமாருக்கும் வில்லூாரில் வைத்து திருமணம் நடைப்பெற்றது. கல்யாணத்திற்கு 25 பவுன் தங்க நகைகளும், சீர்வரிசையாக 2 லட்சத்திற்கு பொருட்களும் சங்கரேஷ்வரிக்கு அவரது பெற்றோர்கள் கொடுத்தார்கள். அதற்கு முன்பு நடைபெற்ற நிச்சியாத்தற்கு 1.5 லட்சம் செலவானதாக சங்கரேஷ்வரின் பெற்றோர்கள் கூறினார்கள். திருமணம் முடிந்ததும் சங்கரேஷ்வரி அவரது கணவர் வீட்டில் வாழ்ந்து வந்தார். மாமியார், மருமகளுக்கும் நகை கேட்டது சம்மந்தமாக சண்டை நடந்தது என கேள்விப்பட்டேன். ஊர் பெரியோர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசினார்கள். அதில் சமரசம் ஏற்படாததால் புகார் கொடுத்தாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் அரசு தரப்பு கு.வி**

கடந்த 09.09.2015 ம்தேதியன்று 1 வது எதிரி சுரேஷ்குமாருக்கும், அ.சா.1 சங்கரேஷ்வரிக்கும், 25 பவுன் நகையும், 1 லட்ச ரூபாய் ரொக்கமும், 2 லட்சத்திற்கு சீர்வரிசை பொருட்கள் கொடுத்து திருமணம் நடைபெற்றது என்றும் திருமணத்திற்கு முன்னதான நிச்சியாத்ததிற்கு 1.5 லட்சம் சங்கரேஷ்வரின் பெற்றோர்கள் செலவு செய்தார்கள் என்றும், திருமணம்

முடிந்து சங்கரேஷ்வரி 1 முதல் 4 வரை உள்ள எதிரிகள் வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள் என்றும், இந்நிலையில் 1 முதல் 4 வரை உள்ள எதிரிகள் சங்கரேஷ்வரியை உடலாலும், மனதாலும் கொடுமை செய்து அவரை அசிங்கமாக பேசி, அடித்து, துன்புறுத்தி சங்கரேஷ்வரியின் நகைகளை பிடுங்கி வைத்துக்கொண்டும், தர மறுத்தும் 1 வது எதிரி லதா என்ற பெண்ணுடன் சேர்ந்து வாழ்ந்து கொண்டு வீட்டிற்கு வராமல் இருந்துள்ளார் என்றும்அதை மற்ற எதிரிகள் தட்டி கேட்டகாமல் உறுதுணையாக இருந்தார்கள் என்றும், 5 வது எதிரி அ.சா.1 சங்கரேஷ்வரியை போனில் தொடர்பு கொண்டு தனக்கும், சுரேஷ்குமாருக்கும் திருமாணம் ஆகிவிட்டதென்றும், அது மற்ற எதிரிகளுக்கு தெரியும் என சொல்லி போனில் மிரட்டியுள்ளார் என்றும் இதை பற்றி மற்ற எதிரிகளுடன் சங்கரேஷ்வரி கேட்டதற்கு எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து சங்கரேஷ்வரியை கீழே தள்ளி, அசிங்கமாக பேசி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 4 வரை எதிரிகள் தரப்பில் கு.வி,**

திருமண செலவுகள், இதர செலவுகள், நகை பற்றிய விசயங்கள் அனைத்தும் எனது நாத்துனார் அண்ணபுஷ்பம் சொல்லிதான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான்.

**5 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,**

1 முதல் 4 வரை உள்ள எதிரிகளின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.